REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 31உ திங்கள் (15—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 1உ செவ்வாய் (16—7—57) [இதழ் 25

மாவட்டக் கழகங்களைக் கலைக்க சென்னை சர்க்கார் முடிவு!

வரும் அக்டோபர் 31-ந்தேதியுடன் மாவட்டக் கழகங்கள் (ஜில்லா போர்டுகள்) ஒழிக்கப்படும் என்றும், அவற்றிற்குப் பதிலாக 'பஞ்சாயத்து யூனியன்'கள் நிறுவப்படும் என்றும் தெரியவருகிறது.

இந்த ஸ்தல ஸ்தாபனங்களின் எதிர்காலம்பற்றி முடிவு செய்வதற்காக மந்திரிசபை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஆராய்ந்து வந்தது என்றும், அந்தக் குழு மேற்கண்ட முடிவினை எடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

ஜூலை 15! வீரம் செறிந்த வரலாற்றுப் பொன்னாள்

'ஊழல்கள் மலிவதற்குக் காரணம் என்ன?'

'வரி செலுத்துவதற்குத்தான் மனிதன் பிறந்தானா?'

'மாவட்ட ஆட்சியை சீர்திருத்துங்கள்'

சட்டசபையில் ப. உ. சண்முகம், க. அன்பழகன், எம். ஆனந்தன், பி. எஸ். சந்தானம் யோசனைகள்

சென்னை, ஜூலை 15—

மாவட்ட நிர்வாக இலாகா மானியமாக ரூ. 3,43,67,400 ஒதுக்கவேண்டும் என்று சட்டசபையில் ரேவின்யூ அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலர் கோரினர்.

இந்த மானியக் கோரிக்கைமீது கொண்டு வரப்பட்ட வெட்டுப் பிரரேபணையை ஆதரித்து சழக உறுப்பினர்கள் ப. உ. சண்முகம், க. அன்பழகன், எம். ஆனந்தன், பி. எஸ். சந்தானம் ஆகியோர் பேசினர்.

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாவட்டங்களின் நிர்வாகம் சரிவர இல்லாததே ஏராளமான ஊழல்கள் மலிந்து வருவதற்குக் காரணம். கடந்த தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு வேலை செய்தவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். ஆடுகிறவன் கால் சரியாக இல்லாவிட்டால் ஆட்டம் நன்றாக இருக்காது. நானும், உறுப்பினர் மு. கருணாநிதியைப் போன்று உவமை கூறுவது அமைச்சர்களுக்கு வியப்பாக இருக்கலாம்; என்ன செய்வது? நமது அமைச்சர்களுக்கு எது பிடிக்குமோ அதைத்தான் கூறவேண்டும். அதனால்தான், அதே உவமையைக் கூறினேன். இன்று மாவட்ட நிர்வாகத்தில் உள்ளவர்கள் அதிகார போதையேறி பல அநீதிகளை செய்து வருகின்றனர். மாவட்ட நிர்வாகத்தில் பெரிய அதிகாரிகளின் தலையீடு உள்ளது. இதுவே மாவட்டங்களின் பிற்போக்கான நிலைமைக்குக் காரணம்.

"என்னுடைய தொகுதியில் காளிப்பாடி பிர்க்கா மிகவும் பின்தங்கியுள்ளது. 'மனிதன் வரிக் கட்டத்தான் பிறந்திருக்கிறான்' என்று நினைக்கவேண்டிய அவலநிலை உள்ளது. அரசாங்கம் மக்களுக்காக என்ன செய்தது?

"சில இடங்களில் பெரிய அதிகாரிகள், காட்டுப் பகுதிகளில் நுழைவதுகூட கிடையாது. பல இடங்களில், போலீசாரே கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குத் தூண்டுதலாக உள்ள நிலைமை இருக்கிறது.

"இன்று எனக்கு பதிவு அஞ்சலில் ஒரு மடல் கிடைத்துள்ளது. காட்டுப் பகுதிகளில் கால்நடைகளை மேய்ப்பதற்குத் திடீரெனத் தடை செய்யப்பட்டுள்ளதாம். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும். பணக்காரர்களுக்கு சலுகைகாட்டி ஏழைகளை துன்புறுத்துவது கூடாது. வரி வசூல் விஷயத்தில் எல்லோரையும் ஒரே மாதிரியாகக் கவனிக்க வேண்டும்.

"என்னுடைய மாவட்டத்திற்கு ஒரு முதல்தர மாஜிஸ்திரேட் நீதிமன்றம் வேண்டும்,

"மாவட்ட ஆட்சிமன்றத்தின் கீழ் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கு சரிவர ஊதியம் தரப்படுவதில்லை.

"இன்றைய மாவட்ட நிர்வாகம், பழைய மொகலாயர் காலத்தில் இருந்தது போலவே, வெள்ளையன் காலத்திலும் நீடிக்கப்பட்டு, சுதந்திரம் கிடைத்த பின்னரும் பின்பற்றப்படுகிறது. மாவட்டத்தை இந்த காலத்திற்கு ஏற்றமுறையில் சீர்திருத்த வேண்டும்.

"டில்லி, ஒரு அதிகாரிகளின் காடாக காட்சியளிக்கிறது என்று பண்டித நேரு கூறியதுபோல நமது மாவட்டங்கள் உள்ளன; இதனால் மக்களுக்கு நன்மை இல்லை. ஊழல்கள் அதிகரிக்கத்தான் பயன்படுகின்றன."

★

தோழர் எம். ஆனந்தன் (கள்ளக்குறிச்சி) அவர்கள் பேசுகையில், தனது தொகுதியில் மாவட்ட நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை தெரிவித்துக் கொண்டு, ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், விவசாயிகள், மற்றும் கல்வியறிவு பெறாத அனைவருக்கும் எளியமுறையில் மாவட்டத்தின் மூலம் சேவை செய்யக்கூடிய முறையில் நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

★

தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில், "அமைச்சர்கள் மாறு வேடத்தில் செல்லாவிட்டாலும், உரிய வேடத்தில் சென்று உண்மை நிலையை அறிவதற்கு முயற்சிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

"இப்போது மாவட்டங்களின் அமைப்பு திருப்திகரமாக இல்லாதிருப்பதற்கும், அதனால் தவறுகள் பல ஏற்படுவதற்கும் மாவட்டங்களைப் பற்றி ஒரு உறுதியான கொள்கையை அரசாங்கம் கொண்டில்லாததே காரணமாகும். அரசாங்கத்திற்கு மாவட்

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடரின் விடுதலை வேட்கையை உலகறிந்த நன்னாள்

இன்னுயிர் ஈந்த முன்னோடிகளுக்கு வணக்கம் செலுத்துவோம்!

தியாகத் தழும்பேற்ற வீரர்களை வாழ்த்துவோம்!

தாயக விடுதலைக்கு சூளுரைத்துக்கொள்வோம்

ஜூலை 15!

உலகின், இனி எழுதப்பட வேண்டிய தேசீய விடுதலைப் போராட்ட வரலாற்றில், சிறப்பான இடம் பெறப்போகும் பொன்னாள்—ஜூலை 15!

திராவிடத்தின் வரலாற்றில், 'அதன் விடுதலை எழுச்சியை உலகறிந்த முதல் நாள்' என்று சிறப்பிக்கப்படவிருக்கும் நன்னாள்—ஜூலை 15!

ஜூலை 15! அன்றுதான், திராவிடர்கள், தாங்கள் இழந்துவிட்ட பண்டைப் பெருமையை மீண்டும் பெறுவதற்காக—மறந்திருந்த வீர வரலாற்றினை நினைவூட்டிக் கொள்வதற்காக—அழித்துவிட இடையறாது முயற்சிக்கப்படும் தங்கள் பண்பாட்டினை பாதுகாப்பதற்காக, வீராவேசம் கொண்டு எழுந்துவிட்டனர் என்பதைப் பிரகடனப்படுத்தினர்! ஆம்! அன்றுதான், திராவிடரின் விடுதலை எழுச்சிக்கு இலக்கியம் சமைத்த மும்முனைப் போராட்டம் நிகழ்ந்தது!

ஜூலை 15!—திராவிடர், தங்களை மீண்டும் ஓர்முறை, உலகில் முதல்தரமான சமுதாயமாக ஒளிவிடத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை உலகிற்குப் பறை சாற்றிய மும்முனைப் போர் நிகழ்ந்த நன்னாள்!

ஜூலை 15!—அன்றுதான் திராவிடர், தங்களை சமுதாய—பொருளாதார—அரசியல் துறைகளில் நிரந்தர அடிமைகளாக்கிவிடக் கனவு காணும் தீயசக்திகளுக்கு மகத்தானதோர் அறைகூவல் தந்தனர்—எச்சரிக்கை விடுத்தனர்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் திரண்டெழுந்து ஈடுபட்ட மும்முனைப் போர் மூலம்!

'புதுக் கல்வித் திட்டம்' என்ற பெயரில், திராவிடர்களை என்றென்றைக்கும் மூடர்களாக்கிவிடச் சதி செய்த ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டம்!

திராவிடத்தின் வளத்தையும் வாழ்வையும் சுரண்டிக் கொழுக்கும் வடவரின் முதலாளித்துவத்திற்குத் தெளிவான எடுத்துக்காட்டாக விளங்குவது டால்மியாபுரம், 'கல்லக்குடி' என்ற பெயரை விட்ட கொடுமை!

கனக விசயர்களை முன்னோராகப் பெற்ற வடவர் தலைவர் ராம் பண்டிதர், இன்று சேரன் செங்குட்டுவன் வழி வந்த திராவிடரை அடக்கி ஆளும் அதிகாரம் பெற்றுவிட்ட மமதையால், திராவிடரை ஏசிய துடுக்குத்தனம்! இவற்றிற்கு எதிராக திராவிடர் அன்று கிளர்ந்தெழுந்தனர்.

சமூக—பொருளாதார-அரசியல் துறைகளில் விடுதலை கோரும் திராவிடர்கள், அதற்காக நடத்திவரும் இடையறாப் போராட்டத்தின் முக்கியமான கட்டம் நிகழ்ந்த நாள் ஜூலை—15.

அந்த ஜூலை 15-ல்தான், திராவிடரின் விடுதலை வேட்கை—சுதந்திர தாகம் முதன்முதலாக உலகறியச் செய்யப்பட்டது.

அந்தப் போராட்டத்தில்தான் திராவிடரின் வீரமும், அவர்களை வழி நடத்திச் செல்லும் கழகத்தின் விவேகமும், அந்தச் சமுதாயத்தின் பகைவர்களுக்கு உணர்த்தப்பட்டது!

'தாயகம் மீள, தன்மானம் காக்க, திராவிடருக்குப் பூரண விடுதலை வாழ்வு பெற்றுத்தர, இன்னுயிரும் ஈவதற்குத் தயங்கோம்' என்று சூளுரைக்கும் வீர வாலிபர்கள், ஆயிரக்கணக்கில் திரண்டுவிட்டனர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில்—என்ற உண்மையை, உலகம் கண்டது அன்றுதான்!

தடியடி, வெஞ்சிறை வாசம், துப்பாக்கிக் குண்டுகள், இவை எவையும் போராட்ட வீரர்களின் உறுதியைக் குலைக்கவில்லை — குலைக்க முடியவில்லை!

ஜூலை 15! அன்று நடைபெற்ற போரில் ஆறு வீரர்கள், வீரமரணத்தைப் பரிசாகப் பெற்றனர்; நூற்றுக் கணக்கானோர், தியாகத் தழும்புகளை ஏற்றனர்; ஆயிரக் கணக்கானோர் — ஆறாயிரம் பேர்வரை சிறை அனுபவங்கள் கிடைக்கப் பெற்றனர்!

தாயகத்தின் விடுதலைக்காக—திராவிடருக்கு சமுதாய-பொருளாதார-அரசியல் சுதந்திரம் பெற்றுத் தருவதற்காகப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் ஈந்த உத்தமர்களுக்கு இன்று நாம் வீர வணக்கம் செலுத்துகிறோம்! விழுப் புண்களை ஏற்றுக் கொண்ட வீரர்களை வாழ்த்துகிறோம்!

ஜூலை 15! மும்முனைப் போர் நிகழ்ந்து நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டன; ஆனால், இன்று நிகழ்ந்ததுபோலவே அந்தப் போராட்டக் காட்சிகள் திராவிடத்தின் நெஞ்சத்தில் நிழலாடுகின்றன-பசுமை குன்றாமல் திகழ்கின்றன!

ஜூலை 15! மும்முனைப் போராட்டம் அடக்கிக் கொண்டிருக்கும் விடுதலை இலட்சியம் ஈடேற, இந்தப் பசுமையான போராட்டக் காட்சிகள், நமக்கு வழிகாட்டுவனவாகும்!

வாழ்க ஜூலை 15! வாழ்க விடுதலை வீரர்கள்! வளர்க அவர் தம் வீரம்! வெல்க, அவர் தம் போராட்டம்!

'அரிசி விலையைக் குறைக்க வேண்டும்'

கேரள சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம்

பி. சோ. கட்சியின் நடவடிக்கை

திருவனந்தபுரம், ஜூலை 13—

'அரிசி விலையைக் குறைக்க வேண்டும்,' எனக் கோரி, முன்னாள் மந்திரி குஞ்சு தலைமையில் கேரள சட்ட சபை முன்பாக சுமார் 2,000 பி. சோ. ஊழியர்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர் போலீஸ் வளையத்தை மீறி சட்டசபை மண்டபத்தின் தலைவாயிலை அடைந்து கோஷம் எழுப்பியிருக்கின்றனர்.

மண்டபக் கதவுகளைச் சாத்திக் கொண்டு சட்டசபை நடைபெற்றிருக்கிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மண்டபத்திற்குள் நுழைய முயற்சிக்கவில்லை.

முதன் மந்திரியிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள், அரிசி விலையைக் குறைக்கக் கோரி மகஜர் ஒன்று தந்திருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—7—57 திங்கள்

தென் மண்டலக் குழு

★

தென் மண்டலக் குழு, கடந்த கிழமை, டெல்லி உள்நாட்டு மந்திரி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மாநில புது அமைப்பினை ஒட்டி இந்தியாவில் பல பாகங்களிலும் பெரும் கொந்தளிப்பு தோன்றியபோது, மாநிலங்களுக்கிடையில் எல்லை விவகாரத்தை ஒட்டி எழும் பிரச்சினைகளை ஆராய்ந்து, கூடிப் பேசிப் பரிகாரம் தேடிக்கொள்வதற்காக என்ற வியாக்கியானத்துடன் அறிவிக்கப்பட்ட மண்டலக் குழுக்கள், பின்னர், குழுவில் இடம் பெறும் மாநிலங்களுக்குப் பொதுவான பல பிரச்சினைகளையும் விவாதிக்கக் கூடியதாக இருக்கும் என்று கூறி, மாநிலப் புது அமைப்புச் சட்டத்தில் இடம் பெறச் செய்தனர்.

அதன்படிதான், கடந்த வியாழனன்று, தென்மண்டலக் குழுவும் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

தென்மண்டலக் குழுவில் இன்று சென்னை, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களும்தான் இடம் பெற்றிருக்கின்றன; மற்றொரு தென்னாட்டு மாநிலமான மைசூர், வடநாட்டில் உள்ளபம்பாயுடன் இணைக்கப்பட்டு மேற்கு மண்டலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தை மண்டலங்களாகப் பிரித்த காலத்தில், மைசூர் தென்மண்டலத்தில்தான் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது; டெல்லி அரசியல் வட்டாரங்களிலும் அப்படித்தான் பேச்சுக்கள் அடிபட்டன; ஆனால், என்ன காரணத்தினாலோ மைசூர், தென் மண்டலத்தில் இல்லாமற் செய்யப்பட்டது. டெல்லிப் பேரரசின் இந்தப் போக்கினை அப்போதே பலரும் கண்டித்தனர்; பாராளுமன்றத்தில், மைசூர் பிரதேச உறுப்பினர்களேகூட எதிர்த்து வாதாடினர். ஆனால், டெல்லி, தன் போக்கினைத் திருத்திக் கொள்ளவில்லை.

'மைசூரும் இணைந்த தென் மண்டலம அமைவது இவை நான்கிற்கும் உள்ள ஒரு வலிமை குன்றாத இன ஒற்றுமையை—பண்பாடு ஒருமைப்பாட்டினை அதிகார பூர்வமாக அங்கீகரித்து விடுவதாகும்; அப்படி அங்கீகரிப்பது, வடநாட்டிற்கு எதிராக தென்னாட்டில் வளர்ந்துவரும் விடுதலைச் சக்திகள் பயன்படுத்திக் கொள்வதாயமைந்துவிடும்; அது நெடிய எதிர்காலத்தில் தனது ஆதிக்கத்திற்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாயிருக்கும் என்ற கிலியினால்தான் டெல்லி, மைசூரை தென் மண்டலத்திலிருந்து ஒதுக்கியது' என்ற குற்றச்சாட்டை சுலபத்தில் மறுத்து விட முடியாத வலிமை பெற்றதாகும்.

சட்டபூர்வமாக, தென்னாட்டு மாநிலங்கள் நான்கினுடையவும் இன, கலாச்சார ஒன்றுமையை டெல்லி ஒப்ப மறுத்தாலும், டெல்லி உள்நாட்டமைச்சர் அந்த உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார் சென்னைக்கு வந்திருந்தபோது! நகரமன்றத் தலைவர் தென்மண்டலக் குழு உறுப்பினர்கள், மைசூர் முதல்வர், பண்டித பந்த் ஆகியோருக்குத் தந்த வரவேற்பில், 'தென்னாட்டு மாநிலத்தவராகிய நாங்கள் திராவிடர்கள்; எங்கள் நாடு திராவிட நாடு; எங்கள் பண்பாடு திராவிடப் பண்பாடு' என்று குறிப்பிட்டார். பதிலளித்த பண்டிதபந்த் அவர்களும் 'இந்தத் திராவிடப் பண்பாடு ஆரியப் பண்பாட்டிலிருந்து வேறுபட்ட ஒன்று என்றால். அதற்கு நான் தலைவணங்குகிறேன்' என்று கூறினர்.

எனவே, தென்னாட்டவர்—திராவிடர்—தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளையும் பேசும் மக்களின் பண்பாடு திராவிடப் பண்பாடு என்று டெல்லி சட்ட பூர்வமாக ஒப்ப மறுத்தாலும், வரலாற்று உண்மையை மறுத்துவிட முடியாது.

துவக்கப்பட்ட தென் மண்டலக் குழுவில் மைசூர் முதல்வரும் விசேட அழைப்பின் பேரில் கலந்துகொண்டிருக்கிறார்; மண்டலக் குழுவினரும், தொடர்ந்து மைசூரையும் குழுக் கூட்டங்களுக்கு அழைப்பது எனத் தீர்மானித்திருக்கிறார்கள். இதனை தலைமை வகித்த பண்டித பந்தும் ஒப்பியிருக்கிறார்.

மைசூரை விலக்கி வைத்துவிட்டு, தென்னாட்டு மாநிலங்களின் பொதுப் பிரச்சினைகளை ஆராய்வது இயலாது என ஒப்பும்போது, மைசூரை சட்டரீதியாகவே குழுவில் இடம் பெறச் செய்வதில் தவறென்ன? இந்தவகையில், டெல்லி சர்க்காரே முன்வந்து இந்தக் காரியத்தைச் செய்யும் என்று எதிர்பாராமல், இதர மூன்று மாநிலத்தவரும் ஒன்று சேர்ந்து டெல்லியை வற்புறுத்த வேண்டும்.

அப்போதுதான், இந்தக் குழு அமைக்கப் படுவதற்குக் கூறப்பட்ட நோக்கத்திற்கு விசுவாசம் செலுத்துவதாயிருக்கும்.

மேலும், இந்தத் தென் மண்டலக்குழு, வெறும் ஆலோசனை சபையாக இருக்கிற நிலையில் நிலைத்துவிடாமல் தங்களுக்கு, தொடர்ந்து அபிவிருத்தித் திட்டங்களில் வஞ்சகம் புரியும் டெல்லிப் பேரரசிடம் உரிமைக்காகப் போரிடுகிற ஆற்றல் கொண்டதாகவும் மிளிருவதில்தான், இந்தக் குழுவால் சிறிதேனும் பலன் உண்டு என்ற நம்பிக்கையை மக்கள் பெறுவது இருக்க முடியும்.

10 இலட்சம் நோயாளிகள்

பலன் பெறுவராம்!

கதிரியக்க ஐசடோப் மூலம் டாக்டர்களின் சாதனை!

வருங்காலத்தில், உலக நாகரிகத்தின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் கதிரியக்க ஐசடோப் ஒரு முக்கியமான அங்கம் வகிக்குமாம்!

தொழில் துறையில் முக்கியமாகப் பயன்படுவதுடன், மருத்துவர்கள் ஆண்டொன்றுக்கு 10 இலட்சத்திற்கும் அதிகமான நோயாளிகளைக் குணப்படுத்தவும் இந்த அணுவின் துணைப் பொருள் பயன்படுமாம்.

எண்ணெய், வாயு, நிலக்கரி ஆகியவை சேர்ந்து அளிப்பதை விட 40 மடங்குக்குமேல் மின்சார சக்தி அடங்கியுள்ள அணுசக்தி மனிதனுக்கு வருங்காலத்துக்கு நம்பிக்கை அளிக்கக்கூடுமாம்.

'மேலும் உதவிகள் தேவையா?'

அகதிகளுக்கு புதுவாழ்வளிப்பதில் டெல்லி காட்டும் அக்கரை

கல்கத்தா, ஜூலை 13—

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து தினந்தோறும் ஓடிவந்து கொண்டிருக்கும், ஆயிரக்கணக்கான அகதிகளின் எண்ணிக்கை, அதிகரிக்காமலிருந்தால், இரண்டாம் திட்ட காலத்தில் பிரச்சினையின் கடுமை குறையலாம்" என்று, மத்திய அகதி மந்திரி மேகர் சந்த் கன்னா என்பார் தெரிவித்திருக்கிறார்;

மேலும், அகதிகள் வாழும் ஒவ்வொரு மாநிலத்திலும் 'எவ்வளவு அகதிகள் வாழுகிறார்கள்; அவர்களில் எத்தனை பேருக்கு இன்னும் அதிகமான உதவி தேவை என்பதை எல்லாம் கணக்கெடுத்து அனுப்புமாறும் எல்லா மாநிலங்களுக்கும் — குறிப்பாகக் கிழக்கு மண்டல மாநிலங்களுக்கு டெல்லி சர்க்கார் தாக்கீது அனுப்பியிருக்கிறார்களாம்!

திரிபுராவிலும், அசாமிலும் தான் இனி அகதிகள் அதிகமாகக் குடியேற்றப்படுவார்களாம்! மேற்கு வங்கத்தில் இனி அவர்களைக் குடியேற்ற இடமே இல்லையாம்!

திரிபுராவில் இப்போது மக்கள் தொகையில் 50 சதவிகிதம் வரை அகதிகள்தான் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இப்போது திரிபுராவில் சுமார் 83 ஆயிரம் அகதிக் குடும்பங்கள் இருக்கின்றனவாம்! இவற்றில் 10,000 குடும்பங்கள் முகாம்களில் வாழுகின்றனவாம்! 25,000 குடும்பங்கள் புனர்வாழ்வு பெற்றுவிட்டனவாம்! 27,000 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டிருக்கிறது!

உலக அரிசி உற்பத்தி

1956—57-ம் ஆண்டில் 44,180 கோடி இராத்தல் என அறிவிப்பு

1956—57-ல் உலகில் அரிசியின் விளைச்சல் அதற்குமுன் கண்டிராத அளவில் உள்ளதாம்!

"1956—57-ல் இந்தியாவில் அரிசி உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு எக்கச்சக்கமாக அளவில் மிகவும் அதிகரிக்கப்பட்டிருந்தது; பெரும்பாலான இடங்களில் சாதகமான வெப்பநிலை இருந்தது; புதிய உற்பத்தி முறைகள் அதிகமாகக் கையாளப்பட்டன; இக்காரணங்களால் அரிசி உற்பத்தி விகிதமும், எகராவுக்கு மிக உச்ச அளவுக்கு எட்டியிருந்தது," என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

1956—57-ம் ஆண்டின் உற்பத்தி 9,456 கோடி இராத்தல் நெல் ஆகும் என்றும், இது முந்திய ஆண்டின் உற்பத்தியைவிட 437 கோடி இராத்தல் அதிகம் என்றும் இந்திய சர்க்காரின் மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது.

1956—57-ல் உலக அரிசி உற்பத்தி 44,180 கோடி இராத்தல் அரிசி என்று மதிப்பிடப்பட்டுள்ளதென்றும், இதற்கு முந்திய வருடத்தின் உற்பத்தி 42,610 கோடி இராத்தலாகுமென்றும் விவசாய இலாகா சுட்டிக் காட்டியிருக்கிறது.

புற்று நோய்க்காரர்களுக்கும

பரவலாகிறதாம்!

புதுடில்லி, ஜூலை 13—

சமீபத்தில், அந்தகர்கள், க்ஷய ரோக நோயாளிகள் ஆகியவர்களுக்கு அறிவிக்கப்பட்ட இரயில் பிரயாணக் கட்டணச் சலுகைகள், புற்று நோயால் அவதியுறுபவர்களுக்கும் அதே நிபந்தனைகளின்மீது 1957 ஜூலை 1-ந் தேதியிலிருந்து பரவலாக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவமனைகளுக்குத் தனியாகச் செல்லும்போது — திரும்பும்போதும் அப்பிணியாளி ஒருவர், வழக்கமான இரயில் கட்டணங்களில் நான்கில் ஒரு பங்கு கட்டணம் செலுத்தலாம். நோயாளிகளுடன் உதவிக்கு எவராவது வருவதாயிருந்தால் இருவருக்குமாகச் சேர்த்து ஒருவருக்கான கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமாம்.

மணிக்கு 7,000 மைல் பறக்கும் விமானம்

விஞ்ஞானி தரும் தகவல்

"இன்னும் 30 அல்லது 40 ஆண்டுகளில் ராக்கெட் விமானங்கள் மணிக்கு 7,000 மைல் பறக்கக் கூடும்" என்று புகழ்பெற்ற அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

அது, பலகணி இல்லாத விமானமாக இருக்குமென்றும், காரணம், வெகு வேகமாக விமானம் பறக்குமாதலால், காற்றும் வெப்பமும் பெரும் அளவில் வீசுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

குறைவான சம்பளம் தரப்படும் வேலைகள்

ஆள் பொறுக்குவதில் புதிய ஏற்பாடு

சர்க்காரில் மிகக் குறைந்த சம்பளம் தரப்படும் வேலைகளுக்கு நபர்களைப் பொறுக்குவதில் இனி கேரள சர்க்கார் ஒரு புதுமுறையை வகுப்பர்.

அதாவது, மாவட்ட வாரியாக தேவைகளைக் கணக்கிட்டு, அந்தந்த மாவட்டங்களிலிருந்தே வேலைகளுக்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதனால் ஒருவர், தனது சொந்த ஊரிலிருந்து வெகு தொலைவில் சென்று வேலை பார்க்க வேண்டிய தொல்லை தவிர்க்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதைப் போன்றே, குமாஸ்தாக்கள், டைபிஸ்டுகள் முதலிய உத்தியோகங்களுக்கு ஆள் பொறுக்குவதிலும் இந்த முறை புகுத்தப்படுவது பற்றியும் சர்க்கார் யோசித்து வருகிறதாம்.

பதவியிலிருந்து நீக்கப்பட்ட

முன்னாள் பிரதமர்

மின்சார நிலையத்தில் பொறுப்பாளராக நியமனம்

லண்டன், ஜூலை 13—

முன்னாள் சோவியத் பிரதமரும், சென்ற வாரத்தில் ஆட்சி பீடத்தினின்றும் நீக்கப்பட்டவருமான மாலங்கோவ், மாஸ்கோவிலிருந்து 2,000 மைல் தொலைவிலுள்ளதும், சீனாவின் எல்லைக்கு அருகிலுள்ளதுமான ஒரு நீர்விசை மின்சார நிலையத்தின் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறாராம்!

காசாக்ஸ்தான் போன்ற செழுமையான பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட தலைவர்கள் தம்முடன் ஒத்துழைக்கவில்லை என்பதுதான் குருஷ்சேவின் முக்கியமான குற்றச்சாட்டாம்!

காசாக்ஸ்தான் ரஷ்யாவில்மிகப் பெரிய குடியரசுகளில் ஒன்று; இதன் பரப்பளவு 10 இலட்சம் சதுர மைலுக்கு அதிகமாகும்; ஆனால் இங்கு 60 இலட்சம் மக்களே வாழ்கிறார்கள்.

இங்கு தங்கம், எண்ணெய், கரி முதலியவை ஏராளமாகக் கிடைக்கின்றனவாம்!

'ஐசனோவரின் பேச்சு முட்டாள்தனமானது'

குருஷ்சேவ் கண்டனம்

"விவேகம் படைத்த அமெரிக்கர்களில் ஒருவர் என்றே நான் ஐசனோவரைக் கருதுகிறேன்; எனக்கு அவரை நேரடியாகத் தெரியும். அவர் ஒரு இராணுவ அதிகாரியாக இருந்தவர்; என்றாலும், அமெரிக்காவில் சமாதானம் விரும்பும் மனிதர்களுள் அவர் ஒருவர் என்றும் நினைக்கிறேன். அவர் உயர்ந்த கொள்கைகளையும் உடையவர்தான்.

"ஆனால், அவர் பேசுகிற முட்டாள்தனமானவற்றைப் பாருங்கள். அவர், 'எங்கள் விஞ்ஞானிகள் சுத்தமான அணு, நீர்வாயுக் குண்டுகளைத் தயாரித்து விட்டார்கள்' என்று சொல்கிறார்.

"தோழர்களே! இப்படிப் பேசுவதற்கு அவர் வெட்கப்பட வேண்டும். சுத்தமானதாம்! எப்படி? ஆபாசமான வேலை செய்யவா சுத்தமான குண்டுகள்? நீர்வாயுக் குண்டு என்றால் என்ன? பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அழிவு என்று பொருள். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? அமெரிக்கர்கள் சுத்தமான நீர்வாயுக் குண்டுகளைக் கண்டுபிடித்து விட்டதால் நாமெல்லாம் அமைதியாக வாழமுடியுமாம்? என்னே முரண்பாடுகள்!"

என்பதாக, ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் குருஷ்சேவ், இங்கு தொழிலாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

7 லட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கு கேரள சர்க்கார் நிலம் வழங்கும்

திருவனந்தபுரம், ஜூலை 13—

சர்க்கார் வசமுள்ள நன்செய் மற்றும் புன்செய் நிலங்களை ஏழை மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதென கேரள சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

சுமார் ஏழு இலட்சம் பேருக்கு, இந்த விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

இந்த நிலமளிப்பு வேலை, உத்தேச நிலச் சட்டம் வருமுன்பே துவங்கிவிடும்.

நிலமில்லாத ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் நன்செய் நிலம் அல்லது ஏழு ஏக்கர் புன்செய் நிலம் தரப்படும்.

நிலம் தரப்படுவோர், நிலச் சொந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள்; பெரும்பாலும், பின்தள்ளப்பட்ட வகுப்பினரே நிலம் பெறுவர்.

நிலச் சட்டம் கொண்டு வருவதற்காக சட்டசபையின் விசேடக் கூட்டம் ஒன்றும் கூட்டப்படும்

உத்தேசத்திலிருக்கும் நான்கு நில மசோதாக்களில், குடிவாரம் பற்றிய மசோதா மட்டுமே ஜூலை 13-ல் கூடும் சட்டசபையில் விவாதத்திற்குவரும் என்றும், எஞ்சிய மூன்று சட்டங்களும் விசேடக் கூட்டத்தின் போதுதான் கொண்டுவரப்படும் என்றும், நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் விவகாரம் இன்னும் இறுதியாகவில்லை என்றும் கூறப்படுகிறது,

மாவட்டக் கழக நிர்வாகம்

ரூ. 8 இலட்சம் பற்றாக்குறையாம்

சேலம், ஜூலை 13—

"சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தின் செலவினங்களை கணிசமான அளவிற்குக் குறைக்க வேண்டும். புதிய உயர்நிலைப் பள்ளிகளையோ, புதிய மருத்துவ மனைகளையோ இந்த ஆண்டில் திறக்கக்கூடாது. செலவினங்களை குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாநில அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்"

என்று, சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தின் 1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சம்பந்தமாக சென்னை அரசாங்கம் அனுப்பியிருந்த உத்தரவு 8-ந் தேதி மாலை தோழர் டி. எம். காளியண்ணன் தலைமையில் நடைபெற்ற சேலம் மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இது குறித்து பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

"சேலம் மாவட்டம் மிகவும் பிற்போக்காக உள்ளது; ஆகவே, இந்த நிலையில் அரசாங்கம் கூறியுள்ளவாறு 1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் செலவினங்களைக் குறைக்க இயலவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறோம். இந்த மாவட்ட ஆட்சி மன்றத்தாருக்கு தேவையான விசேட உபகாரத் தொகையைக் கொடுத்து பற்றாக்குறையை நீக்க உதவி செய்யுமாறு மாநில அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறோம்."

1957—58-ம் வருட வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ரூ. 8 இலட்சம் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ந-நி.)

தமிழ் நாட்டுத் தீப்பெட்டித் தொழில்

கலால் வரி உயர்வால் ஏற்படும் இன்னல்கள்

நல்வாழ்வு அளிக்க மத்திய நிதி அமைச்சரிடம் முறையீடு

தசாம்ச நாணய முறையினாலும், தீப்பெட்டி மீது விதிக்கப்படும்கலால் வரியை உயர்த்தியதாலும் தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை விளக்கி, சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் தூதுக்குழு ஒன்று மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியிடம் மனு ஒன்றைச் சமர்ப்பித்தனர்; அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:—

"40 குச்சிகள் கொண்ட தீப்பெட்டி ஒன்று தற்போதைய கலால் வரி விகிதத்தில் 4 புதிய காசுக்கு விற்க வேண்டியதாகிறது. புதிய நாணயங்கள் இன்னும் புழக்கத்திற்கு அதிகம் வராததால் தீப்பெட்டி சில்லரையில் முக்காலணாவுக்கு விற்கப்படுகிறது; பொதுமக்கள் 40 குச்சிகள்கொண்ட தீப்பெட்டிக்கு முக்காலணா கொடுப்பதற்குப் பதிலாக 60 குச்சிகள் கொண்ட தீப்பெட்டியை ஒரு அணா கொடுத்து வாங்குகின்றனர்; ஆகவே 40 குச்சிகள் கொண்ட தீப்பெட்டிகள் விற்பனை அதிகமாகக் குறைந்துவிட்டது. அதற்குத் தகுந்தாற்போல் அவைகளின் உற்பத்தியும் குறைந்துவிட்டன.

"எனவே, குடிசைத் தொழிலான இந்தத் தீப்பெட்டித் தொழிலுக்கு நல்வாழ்வு அளிக்க 3 புதிய காசுக்கு விற்கக்கூடிய 30 குச்சிகள்கொண்ட தீப்பெட்டிகளை உற்பத்தி செய்ய அனுமதிக்கக் கோருகிறோம்."

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய அரசாங்க பாங்கி 1955 ஜூலை 1-ந் தேதியன்று இந்திய இம்பீரியல் பாங்கியை தேசிய உடைமையாக்கியதின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது; இந்தப் பாங்கியை நிர்வகிக்க ஒரு மத்திய போர்டு இருக்கிறது.

ஐந்து வருட காலத்திற்குள் 400 கிளை பாங்கிகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 234 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன.

இந்தப் பாங்கியின் மூலதனம் ரூ. 20 கோடி; வெளியிடப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி; தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் தொடர்ந்து கடன் வசதிகள் அளித்துவரப்படுகிறது.

1955—56-ல் தொழில் மும்முரமாக நடைபெற்ற நேரத்தில் மொத்தம் ரூ. 183 கோடி கடன் வழங்கப்பட்டது.

தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரி

சென்னையில் ஏற்படுத்தப்படுமாம்

புதுடில்லி, ஜூலை 13—

பல்வேறு வகையான தேசீய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தொழில் நுட்ப ஆள்பலம் பெரும் அளவில் தேவைப்படுவதாலும், தொழில் நுட்பக் கல்வி வசதிகள் பரவலாக்கப்படவேண்டியதாலும் தெற்கு, வடக்குப் பகுதி உயர்தரத் தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளை உடனடியாக ஏற்படுத்துவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். முன்னைய திட்டத்தின்படி இந்நிலயங்களை இரண்டாவது திட்டகாலப் பிற்பகுதியில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்தது.

தென்பகுதி நிலயம் சென்னையிலும், வடபகுதி நிலயம் கான்பூரிலும் ஏற்படுத்தப்படும்.

சென்னையிலும், கான்பூரிலும் இதற்குப் பொருத்தமான நிலங்களை வாங்குவது, அப்பிரதேசங்களை நகர்ப்புறங்களாக அபிவிருத்திச் செய்வது, பயிற்சிப் பாடத்திட்டங்களை வகுப்பது ஆகியவை சம்பந்தமான பூர்வாங்க ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

இதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 400 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பட்டப் படிப்பு வகுப்பு மாணவர்கள் சுமார் 1,500 பேரும், பட்ட பிற்காலப் படிப்பு—ஆராய்ச்சி மாணவர்கள் சுமார் 500 பேரும் பயிற்சி பெறுவதற்கான வசதிகள் கொண்டதாக அவை இருக்கும்.

பிறப்பு — இறப்பு விகிதங்கள்

அதிகரிக்கின்றனவா?

புதுடில்லி, ஜூலை 13—

1957 மே மாதத்தில் 30,000-மும் அதற்கு மேலும் மக்கள் தொகையுள்ள நகரங்களில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 27·0-ஆகவும், இறப்பு விகிதம் 13 0-ஆகவும் இருந்தன. 1956 மே மாதத்தில் இதற்குச் சரியான புள்ளி விவரங்கள் முறையே 26 0 ஆகவும் 13 0-ஆகவும் இருந்தன.

அகதிகளுக்கு புனர்வாழ்வு தேடித் தரும் சர்க்கார்....!

இரண்டரை கோடி பிச்சைக்காரர்களைக் கவனியாமல் இருப்பதேன்?

அரைகுறைவேலைகளில் நல்லபலன் ஏற்படுமா?

"பிச்சை எடுத்தலை ஒரு தத்துவார்த்தக் கொள்கையாக—ஒரு கலையாக—கௌரவமானதொரு தொழிலாக நினைப்பவர்கள் பலரைக் கொண்டுள்ள இந்த தேசத்தை 'பிச்சைக்கார நாடு' என்று யாராவது சொன்னால், 'கோபித்துக் கொள்ளுவது பொருத்தமல்ல' எனலாம்.

"நமது நாட்டில் சுமார் இரண்டேகால் கோடிப் பேர் பிச்சைக்கார கூட்டத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்க வேண்டும். இவ்வளவு பெரிய கூட்டம் நாடு முழுவதிலும் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றது.

"இந்த நாட்டிலேயே பிறந்து எப்படியோ பிழைக்கின்றார்கள் என்பதைத் தவிர, இவர்களுக்கும் அகதிகளுக்கும், அல்லது இடம் பெயர்ந்தவர்கள் எனப்படுவோருக்கும் வித்தியாசமில்லை.

"அகதிகளுக்கு என்று புனரமைப்பு, புனர்வாழ்விப்புத் திட்டங்கள் மிக ஜரூராகச் செய்யப்பட்டன; அப்படிச் செய்ய வேண்டியதே—தவறில்லை; ஆனால், 'நமது நாட்டுப் பிச்சைக்கார வர்க்கத்தினருக்காக உருப்படியான புனர்வாழ்வளிப்பு வேலைகள் செய்யப்பட்டதாகக் காணோம்' என்பதை, வருத்தத்துடன் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

"பிச்சைக்காரர் தொல்லை என்பது ஒரு கடுமையான சமூகப் பிணியாய்க் காணப்படுகின்றது. இதைப் போக்க பொறுப்பு வாய்ந்த எல்லா ஸ்தாபனங்களும் முயற்சி எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

"சமூக ஒழுக்கம், சுகாதாரம், மேம்பாடு முதலானவை குலைவதற்கு பிச்சை எடுப்பவர்கள் காரணமாய இருக்க முடியும். ஆகையால், நாட்டு மக்களின் நல்வாழ்வு கோரிப் பாடுபடும் தேசிய சர்க்கார், பிச்சைக்காரர் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண திட்டமிட்டுத் தீவிரமாய் வேலைசெய்ய வேண்டும்; அரைகுறை வேலைகளால் நல்ல பலனைக் காண்பதரிது"

இவ்வாறு, 'பிச்சைக்காரர் பிரச்சினை' என்ற தலைப்பில், 12-7-57 'நவ இந்தியா' (சென்னை) இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் பெருந்தன்மை!

மத்திய அமைச்சர் ஒப்புதல்

"தெற்கு மாநிலங்கள் சுமார் 10 கோடி மக்கள் தொகை கொண்டதாக இருக்கின்றன. மாநில சீரமைப்புக்குப் பின்னரும்கூட தமிழ் நாட்டில் 3 இலட்சம் மலையாளிகளும், 8 இலட்சம் கன்னடியரும் 32 இலட்சம் தெலுங்கு பேசுபவர்களும் வசித்து வருகின்றனர்."

—தென்மண்டலக் குழுவில் பண்டித பந்த்.

ஆதாரக் கல்விப் பயிற்சிக் கல்லூரி

ஒரத்தநாட்டில் நிறுவப்படும்

சென்னை, ஜூலை 13—

சென்னை பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு ஆதாரக் கல்விப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரத்தநாட்டில் அமைக்க அரசாங்கம் நிச்சயித்திருக்கிறதென்றும், 1957—58-ம் ஆண்டில் இது நிறுவப்பட்டு சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படுமென்றும் சர்க்கார் செய்தி ஒன்று கூறுகிறது. கல்லுப்பட்டியில் இக்கல்லூரி நிறுவப்படவிருந்தது.

வடநாட்டில் இரு திட்டங்கள்

நிறைவேற்ற ஹாலந்து முன்வருகிறதாம்

சௌராஷ்டிரத்தில், பெரியதோர் நிலமீட்புத் திட்டத்தையும், உத்திரப் பிரதேசத்தில் தோல் தொழில் வளர்ச்சிக்கான திட்டத்தையும் அமுல் நடத்துவதற்குப் பொருளாதார உதவியும், தொழில் நுணுக்க உதவியும் அளிக்க ஹாலந்து முன்வந்துள்ளதாம்!

வருமான வரி இலாகா

ஊழியர் ஆர்ப்பாட்டம்

இடமாற்ற உத்தரவை ரத்து செய்ய கோரிக்கை

கல்கத்தா, ஜூலை 12—

வருமான வரி ஊழியர்கள் சுமார் 1,000 பேர் இன்று, வருமான வரி அதிகாரியின் அலுவலகத்தின் முன்பு கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அவர்கள், அலுவலகம் வந்த சில உயர்தர அதிகாரிகளைச் சுற்றி வளைத்துக் கொண்டு சுமார் பன்னிரண்டு மணி நேரம் வரை அந்த அதிகாரிகளைச் சிறைப்படுத்தியும் வைத்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

பின்னர், அன்று இரவு 12-45 மணிக்குத்தான் போலீசார் வந்து அதிகாரிகளை மீட்டுக்கொண்டு சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

கல்கத்தாவிலிருந்து ஜல்பைகுறி முதலிய மாவட்டங்களுக்கு எட்டு ஊழியர்களை இடமாற்றம் செய்து முன்பு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

மாவட்டங்களுக்கு மாற்றுவதினால், இப்போது அந்த ஊழியர்கள் பெற்றுவரும் சம்பளத்தில் ரூ. 32-80 வரை குறைந்துவிடும் என்றும், இதனாலேயே மாற்றல் உத்தரவை எதிர்ப்பதாகவும்கூறப்படுகிறது.

சென்னை நகர வாக்காளர் பட்டியல்

ஆகஸ்டு முதல்தேதிக்குள் குறைகளை தெரிவிக்க வேண்டும்

சென்னைநகர சட்டசபைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களின் திருத்தங்கள் தயாரிக்கப்படுகின்றன; பட்டியலிலுள்ள குறைகளைப் பற்றி நகரசபை ரெவினியூ அதிகாரிக்குத் தெரிவிக்கும்படி பொது மக்களும், சங்கங்களும், அரசியல் கட்சிகளும் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திருத்தங்கள் தயாரிப்பு 1957 ஆகஸ்டு 15-ந் தேதிக்குள் பூர்த்தியாக வேண்டியிருப்பதால், பட்டியலில் செய்ய வேண்டிய திருத்தங்களையும், சேர்க்கப்படவேண்டிய பெயர்களையும் ஆகஸ்டு முதல் தேதிக்குள் தெரிவிக்கும்படி பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பளிப்புகள்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மூலம் 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட தொகை விவரம் :—

1—7—57-ல், விருத்தாசலம் வட்டம்—போலையூர் ஆற்றுத் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் தங்கவேல்—தோழியர் இலட்சுமி ஆகியோர் மணம் செய்து கொண்டதன் நினைவாக ரூ. 2;

1—7—57-ல் மேற்படி வட்டம் சிணனூரில் மணவிழா ஏற்றுக் கொண்ட தோழர் கலியமூர்த்தி-தோழியர் இராசாயாள் அன்பளிப்பு ரூ. 2.

1—7—57-ல், வாண்டையா குப்பம் தோழர் பட்டுச்சாமி—தோழியர்—வடிவாம்பாள் ஆகியோரின் பெண்மகவுக்கு தோழர் என். வி. நடராசன் அவர்களால் 'மணிமேகலை' எனப் பெயரிட்டதன் நினைவாக ரூ. 1 ஆக ரூ. 5-ம் வரப்பெற்றோம்.

* * *

7—6—57-ல், தேனி கழகத் தோழர் கு. இராமசாமி—தோழியர் இந்திரா வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

7—7—57-ல், சென்னை-இராயபுரம் தோழர் சச்சிதானந்தம்—தோழியர் இராசாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

2—6—57-ல், சிவபுரி கழகத் தோழர் முருகேசன்—தோழியர் கமலாம்பாள் வாழ்க்கைத் துணை நலம் ஏற்றதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

காரைக்கால் — அத்திப்படுகை தோழர் காத்தமுத்து — தோழியர் கமலாம்பாள் வாழ்க்கைத் துணைநலம் ஏற்றதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

3-7-57-ல் இரங்கனுதம்பேட்டை தோழர் குழந்தை — தோழியர் ருக்குமணி ஆகியோர் மணவிழா ஏற்றுக்கொண்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது,

* * *

சென்னை — பெரியமெட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் இராமசந்திரன்—தோழியர் செகதா ஆகியோரின் பெண் மகவுக்கு, அண்ணா அவர்களால் 'கலைமணி' என பெயரிடப்பட்டதன் நினைவாக ரூ.1-ம், மற்றோர் ஆண்மகவுக்கு 'வீரமணி' என பெயரிடப்பட்டதன் நினைவாக ரூ. 1 புதுகாசுகள் 2-ம் ஆக ரூ. 2 புதுகாசுகள் 2-ம் 'நம் நாடு வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

மதுரை கழகத் தோழரும்—ஒளி ஓவிய உரிமையாளருமான தோழர் கே. எஸ். இராசாராமின் துணைவியார் தோழியர் இலட்சுமி ஓர் ஆண் மகவுக்கு தாயானார் என்ற மகிழ்ச்சியின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

17—6—57-ல் ஆரணி வட்டம்-குன்றத்தூரில், தோழர். மு. ரேணுகோபால்—தோழியர் வ. சாந்தகுமாரி வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் களம்பூர்-எஸ்.எம். அண்ணாமலை எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அன்பளிப்புத் தொகைகள் அனைத்தும் வரப்பெற்றோம்; நன்றி—பொறுப்பாளர்.

ஆடம்பரத்திற்கும் விளம்பரத்திற்கும் அதிக மின்சாரம் வழங்குவதேன்?

'விவசாயத்திற்கும் தொழில்களுக்கும் அதிகமாக வழங்குங்கள்'

சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி, சி. நடராசன் ஆகியோர் கோரிக்கை

சென்னை, ஜூலை 15—

சென்னை மின்சார இலாகாவுக்காக ரூ. 18,08,15,400-ம், மூலதனச் செலவுக்காக ரூ. 29,76,87,100-ம் அனுமதிக்க வேண்டுமென்று அமைச்சர் இராமய்யா சட்டசபையில் கோரினார்.

வெட்டுப் பிரரேபணையின்மீது பேசிய கழக உறுப்பினர்கள் விவசாயத் துறையின் பல பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டினர்.

விவாதம் முடிவுற்றதும் வாக்கெடுப்பு மூலம் வெட்டுப் பிரரேபணை தோல்வியுற்று மானியக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பிரரேபணையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மின்சாரம் இன்று ஆடம்பரத்திற்கும், விளம்பரத்திற்கும்தான் அதிகமாக வழங்கப்படுகிறது; அதைக் குறைத்துக்கொண்டு விவசாயத்திற்கும், தொழில்களுக்கும் அதிகமாக வழங்க வேண்டும்.

"ஆடம்பரத்திற்கும், விளம்பரத்திற்கும் தரப்படும் மின்சாரத்திற்கு அதிகப்படியான கட்டணத்தை வசூல் செய்யலாம். விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்குக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும்; இதனால் உற்பத்தியும் அதிகரிக்கும்.

"மின்சார விஸ்தரிப்பு நமது மாநிலத்தில் வேகமாக முன்னேறியுள்ளது என்று அமைச்சர் கூறுகிறார். மிக்க மகிழ்ச்சி; ஆனால் என் தொகுதி இத்துறையில கவனிக்கப்படவில்லை என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குறைந்தது 140 கிராமங்களுக்கு மாவட்ட அடிப்படையில் மின்சார வசதி அளித்திருக்க வேண்டும். விவசாய அமைச்சர் பக்தவத்சலம் தொகுதியில் அதிகமாக சலுகை காட்டப்பட்டிருப்பதை, கணக்கிட்டுப் பார்த்தால் தெரியும்! இதில் தவறு ஏதேனும் இருந்தால் நான் திருத்திக்கொள்கிறேன். எனவே, இப்போது இப்பிரச்சினையை நன்றாக ஆராய்ந்து, பின்தங்கிய பகுதிகளுக்கு அதிகம் சலுகை காட்ட வேண்டும்.

"அரசாங்கம் தெருக்களில் விளக்கு போடுவதற்கு வியாபார ரீதியில் தனிப்பட்டவர்களிடம் பொறுப்பு தராமல், அரசாங்கமே பொறுப்பேற்று அதனைச் செய்ய வேண்டும்.

"சேரிகளுக்கு விளக்குகள் போடவேண்டுமானால் ரூ. 22½ கேட்கப்படுவதை அரசாங்கம் கைவிட வேண்டும்; சேரிகளுக்கு விதிவிலக்கு தந்து ஒளிவசதி செய்துதரவேண்டும்.

"எங்கள் மாவட்டத்தில் ஜீவநதி இல்லை என்பது அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். மின்சாரத்தை நம்பித்தான் விவசாயம் செய்யவேண்டிய நிலை அங்கு இருக்கிறது.

"என் தொகுதியிலுள்ள கானை—கஞ்சனூர் பிர்க்காவில் உள்ள கிராமங்களில் விவசாயம் செய்வதற்கு வசதியில்லை — அங்கே மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. நான் அந்த மாவட்ட நிறுவனத்தில் உறுப்பினராக இருக்கிறேன். நிதி அமைச்சர் அங்கு வந்தபோது விரைவில் மின்சாரம் விஸ்தரிப்பு ஏற்பட நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார்; ஆனால் இதுவரையில் ஒன்றும் செய்யப்படவில்லை. அங்கேயே மின்சாரக் கம்பிகள் செல்லுகின்றன; விழுப்புரத்தில் ஒரு மின்சாரத் துணை நிலையம் இருக்கிறது; அதனால், அதிக செலவில்லாமல் மின்சாரத்தை விஸ்தரிக்கலாம்.

"விவசாயிகளுக்கு ஒன்றிரண்டு பம்பு செட்டுகளுக்கு அனுமதி கொடுத்துவிட்டு பணக்காரர்களுக்கு 20 அல்லது 30 பம்பு செட்டுகள் கொடுக்கப்படுகிறது இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

"இப்போது அரசாங்கமே மின்சாரத்தை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால், உடனே 'ப்ரயாரிடி' பட்டியல் தயாரித்து, சரியானபடி வேலை செய்யவேண்டும்.

"விவசாயிகளுக்கு இரவில் மின்சாரம் கொடுப்பது பல ஆபத்துக்களை விளைவிக்கிறது. தண்ணீர் மடைகட்டும்போது இரவில் பாம்புகள் கடித்துவிடுகின்றன; எனவே, அவர்களுக்கு பகல் நேரத்தில் மின்சாரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்."

★

தோழர் சி. நடராசன் (கள்ளக்குறிச்சி) அவர்கள் பேசுகையில் மின்சாரம் சரிவர இதுவரை விநியோகிக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரங்கள் எடுத்துக்காட்டி, விவசாயிகளுக்கு அரசாங்கம் அதிக மின்சார வசதி செய்து தரவேண்டும் என்றும், இப்போது தொழிற்சாலைகளுக்கே அதிகம் தரப்படுகிறது என்றும், இந்த அவலநிலையை மாற்றி விவசாயிகளுக்கு உற்சாகமளிக்கும் முறையிலும், நாட்டின் உற்பத்தியை அதிகரிக்கும் தன்மையிலும் விவசாயிகளுக்கு அதிக மின்சாரம் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கழகக் கூட்டங்கள்

★

கிளியனூர்:
(தஞ்சை மாவட்டம்)
17—7—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்:
பி. வெங்கடகிருட்டிணன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

சின்னாளப்பட்டி:
வள்ளுவர் திடலில்
17—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வி. எஸ். எஸ். மணி
பேசுபவர்:
நாஞ்சில் கி. மனோகரன்

சென்னை 16-வது வட்டம் பொதுநல மன்றப் பொதுக்கூட்டம்

16—7—57 மாலை 6-மணிக்கு சென்னை-ஆனைகெவுனி அருகில்—காளத்தி பிள்ளைத் தெருவில், தோழர் வி. எல். அழகிரி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ., முகவை-ஆர். எஸ். பாண்டியன் சி. பஞ்சாட்சரம், ப. ஆசைமுத்து, மு. கி. மூர்த்தி ஆகியோர் பேசுவர்.

நீர்ப்பாசன வசதி கிடைக்க அரிய யோசனைகள்

சட்டசபையில் எம். எஸ். அண்ணாமலை, எம். செல்வராஜ் ஏ. கோவிந்தசாமி ஆகியோர் கருத்துரை

சென்னை, ஜூலை 15—

சென்னை அரசாங்க நீர்ப்பாசன இலாகாவுக்காக ரூ. 1,59,01,800-ம் நீர்ப்பாசன முதலீடு திட்டங்களுக்காக ரூ. 6,07,37,100-ம் ஒதுக்க வேண்டுமென்று மராமத்து இலாகா அமைச்சர் கக்கன் சென்னை சட்டசபையில் கேட்டுக்கொண்டார்.

இந்த மானியக் கோரிக்கைமீது தி. மு. கழக சட்டசபைக் கட்சித் துணைத் தலைவர் தோழர் க. அன்பழகன் அவர்கள் ஒரு வெட்டுப் பிரரேபணையைக் கொண்டுவந்தார்.

அதன்மீது நடைபெற்ற விவாதத்தில் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு அரிய கருத்துக்களைத் தந்துள்ளனர்.

[வெட்டுப் பிரரேபணை மீது தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை முன்னரே வெளிவந்துள்ளது.]

தோழர் எஸ். எம். அண்ணாமலை (பேளூர் தொகுதி) அவர்கள் வெட்டுப் பிரரேபணையை ஆதரித்துப் பேசுகையில் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள நிலையை தெளிவாக எடுத்துக்காட்டினார்.

நீர்ப்பாசன விஷயத்தில் வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கியுள்ளது என்றும், அரசாங்கம் இப்பகுதியைப் புறக்கணித்து வந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்த வறண்ட மாவட்டத்தில் உள்ள சிறிய ஆறுகளில் தண்ணீர் தேக்கப்பட வேண்டும் என்றும், அதனால் கிணறுகளில்கூட அதிக தண்ணீர் வசதி ஏற்படும் என்றும், இதுவே அந்த மாவட்டத்திலுள்ள மக்களின் விருப்பம் என்றும் எடுத்துரைத்தார்.

★

தோழர் எம். செல்வராஜ் பேசுகையில், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நீர் ஊற்றுக்களைப் பயன்படுத்திக்கொண்டு விருத்தாசலம், சிதம்பரம் தாலுகாக்களில் குழாய்க்கிணறு பாசன வசதியை செய்துதருவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது என்று வலியுறுத்தினார்.

★

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நமது நாட்டில் பெரிய நீர்த்தேக்கங்கள் இல்லாததற்குக் காரணம் பெரிய நதிகள் இல்லை என்று நிதியமைச்சர் அடிக்கடி எடுத்துக்காட்டிவருகிறார்; ஆனால், வடநாட்டில், நீர்த்தேக்கத் திட்டங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவில் திட்டம் வகுக்கப்படுகிறது. இந்த நிலையில் நமது அரசாங்கம் ஏன் செயற்கை மழையைப் பற்றி ஆராயவில்லை? இருக்கிற சிறிய திட்டங்களையாவது நிறைவேற்றினார்களா என்றால், இல்லை!

"என்னுடைய மாவட்டத்தில் பன அணைக்கட்டு தூர்ந்துபோய் மண்மேடாகிவிட்டது. பெண்ணையாற்றில் 12 அணைகள் மண்மேடாகிவிட்டன; இவைகளைச் சீர்செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

"விழுப்புரம் தாலுகா பனமலை ஏரிக்கு நந்தன்கால் வாய்க்கால் வழியாக தண்ணீர் வர வசதி இருந்தும், கடந்த 5 ஆண்டுகளாக அரசாங்கம் இத்துறையில் ஒன்றும் செய்யவில்லை. இதனால் 5,000 ஏக்கர் நிலம் அதிக சாகுபடியாகும். ஆண்டுதோறும் நான் இதை வற்புறுத்திவருகிறேன்; ஆனால் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

"தூர்ந்துபோய் உள்ள வளவனூர் ஏரியின் ஆழத்தை அதிகப்படுத்தினால், மேலும் அதிக தண்ணீர் வசதி விவசாயத்திற்குக் கிடைக்கும். ரூ. 3,000 செலவில் முடியக்கூடிய சப்ளை கால்வாய்த் திட்டம் 1953-லிருந்து கவனிக்கப்படாமல் இருக்கிறது. நீர்ப்பாசன மாநாட்டில் திட்டப்பட்ட திட்டங்கள் எதும் நடைமுறைக்கு வரவில்லை. இத்தகைய சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றினால் கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி தாராளமாக ஏற்படும்.

"விழுப்புரம் தாலுகாவில் மண்ணுக்கடியில்—சின்ன பாபு சமுத்திரம், பெரிய பாபு சமுத்திரம் என்ற இடங்களில் தண்ணீர் கிடைப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள்; அதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

"திரு. சி.பி. இராமசாமி அய்யர் எற்கனவே Trans-Continental Canal Scheme என்ற திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்; அதாவது, கங்கை—யமுனா தண்ணீரை, கோதாவரி—கிருஷ்ணா—பெண்ணை வழியாகத் தமிழ் நாட்டிற்கு கொண்டுவர ஒரு திட்டம் தீட்டினார். அந்தத் திட்டத்தை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து தமிழர்களின் குறையைத் தீர்க்கமுன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"தென் மண்டலக் குழு தீர்மானித்துள்ளபடி தமிழகத்திற்கு கோதாவரித் தண்ணீர் உடனடியாகக் கிடைப்பதற்கான திட்டங்களுக்கு ஆவன செய்ய வேண்டும்."

வாக்கெடுப்பில் வெட்டுப் பிரரேபணை தோல்வியுற்றது; மானியம் கோரிக்கை நிறைவேற்றப் பட்டது.

****

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக 3-வது அரசியல் மாநாடு

★

ஆகஸ்ட் 17, 18 தேதிகளில் திருவண்ணாமலையில் நடைபெறும்

★

தலைவர்: அன்பில் - தருமலிங்கம்

திறப்பாளர்: கிருஷ்ணமூர்த்தி B.A. (Hons)

அண்ணா

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் கழக சொற்பொழிவாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுகிறார்கள்.

★

இரண்டு நாட்களிலும்:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்.

குழுவினரின் நாடகங்கள் நடைபெறும்.

அனைவரும் திரண்டு வாரீர்! கட்டணம்: ரூ. 5, 3, 1.

ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.	முல்லை-சத்தி
மா. பா. சாரதி எம்.எல்.ஏ.	வரவேற்புக் குழுத் தலைவர்
செயலாளர்கள்	பொருளாளர்: முருகையப்பன்

****

ஊழல்கள் மலிவதற்குக் காரணம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்களைப் பற்றி ஒரு உருவான கொள்கை இல்லாதது மிகவும் வருந்தத் தக்கது.

"மாவட்டங்களின் தலைமை நிலையம் ஏறத்தாழ அந்தந்த மாவட்டத்திற்குள்ளாகவே — நடுமத்தியில் அமைந்தால்தான் மக்களுக்கு வசதியாக இருக்கும்.

"தாலுகா அலுவலகங்களில் ஊழல்கள் மலிந்து வருகின்றன. உடனடியாக அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.

"இப்போது உண்மையாக உழைக்கும் கிராம அதிகாரிகளுக்கு மதிப்பில்லை. அவர்களுக்குப் போதிய ஊதியம் தரப்படுவதில்லை. அவர்கள் பொறுப்புடன் வேலை செய்ய வேண்டியவர்கள்; அவர்களின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு வருமானம் இல்லை. அவர்களுக்குத் தரப்படும் ஊதியம் மிகவும் குறைவு அதை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டும்.

"அதிகாரம் அதிகரிப்பதால் நிர்வாகத்தில் ஊழல்களும் அதிகரித்து வருகின்றன. குழப்பங்களும் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க வேண்டும்"

★

தோழர் பி. எஸ். சந்தானம் (திருவண்ணாமலை) அவர்கள் பேசுகையில், ஏழைக் குடிமக்கள் சாதாரணமாக ஒரு நற்சான்றிதழ் பெறுவதற்கும்—தாசில்தார் போன்ற அதிகாரிகளின் கையொப்பம் பெறுவதற்கும்கூட இன்றைய மாவட்ட ஆட்சி மன்றத்தில் பல இடையூறுகள் உள்ளன என்றும், பெரும்பாலும் சமயத்தில் செய்ய வேண்டிய காரியத்தில் தாமதமும், ஏமாற்றமும் ஏற்படுவதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

"மக்களின் உண்மை நிலைமையைத் தெரிந்த கிராம அதிகாரிகளையே அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களைப் பற்றி நற்சான்றுகூற அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'மாட்டுக்காக மானியம் தரப்படுவது ஏழைகளுக்குக் கிடைப்பதில்லை' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

விவாதத்திற்குப் பிறகு, வெட்டுப் பிரரேபணை தோல்வியுற, மானியக் கோரிக்கை அனுமதிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.